பெண்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கீடு கொடுத்து நியமனம் செய்ததற்காக, நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தபோது, 81 பெண்கள் நீதிபதிகள் இருக்கிறார்கள் என்றும், அதில் 32 பேர்கள் கடந்த 3 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் பல நீதிமன்றங்களில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. அப்படி காலியாக இருக்கக்கூடிய இடங்கள் எப்போது நிரப்பப்படும்? அப்படி நிரப்பப்படுகிறபோது, 30 சதவீதம் பெண்களுக்கு உடனடியாக அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு **

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்திலே வேண்டாம், உட்காருங்கள்.மாண்புமிகு சட்ட அமைச்சர். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, இனி எதிர்காலத்திலே 30 சதவீதம் பெண்களுக்கு நிச்சயமாக ஒதுக்கப்படும் என்பதனை நான் உறுதியாக தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

1—

அரியலூர் தொகுதி கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி துவங்குதல்.

***35786—டாக்டர் சு. மணிமேகலை :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதி, கல்லங்குறிச்சியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினைத் துவங்க அரசு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

வங்கிக் கிளைகள் தொடங்குவதற்கான உரிமம் வழங்குவது இந்திய ரிசர்வ் வங்கிக் கொள்கையின்படி செயல்பட்டு வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், ஊரகப்பகுதிகளில் கிளைகளைத் திறப்பது குறித்து ஆய்வு செய்ய மாவட்டந்தோறும் செயல்பட்டு வரும் மாவட்ட ஆலோசனைக்குழு (District Consultative committee) மேற்கொண்டு வருகிறது. இதன்படி மாவட்ட ஆலோசனைக்குழு தங்கள் தங்கள் மாவட்டங்களில் வங்கி வசதியில்லாத கிராமங்களை கண்டறிந்து பரிந்துரை செய்த இடங்களை அரசின் பரிசீலனைக்குப்பின் உரிமம் வழங்கக்கோரி மத்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தேவையான ஆய்வுக்குப்பின் மத்திய ரிசர்வ் வங்கி புதிய வங்கிக் கிளைகள் திறக்க உரிமம் வழங்கி வருகிறது. திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் உள்ள கல்லங்குறிச்சியில் வணிக வங்கி விரிவாக்கத் திட்டம் 1985-90-ம் ஆண்டுக்கான திட்டத்தில் புதிய வங்கிகளை திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவில் இடம்பெறவில்லை.

16—

தக்கோலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

***26684—திருமதி இலதா பிரியகுமார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 1994-95-ம் நிதியாண்டில் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டவும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்வதற்காகவும் ரூ. 75/- இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளியின் பெற்றோர்—ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% தொகை